21.12.2022 அ.வ.எண்.424 /2020 வா.சா.1 – விஜயகுமார்.

<u>1,2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 7 ஏக்கர் 98 செண்ட். சொத்து ஆரம்பத்தில் எனது தகப்பனார் அழகர், மற்றும் பிச்சை என்ற பிச்சைகோன் பெயரில் இருந்தது. அந்த பிச்சை என்ற பிச்சைகோனில் வாரிசுகள் தான் 1,2 பிரதிவாதிகள். அந்த பிச்சை என்ற பிச்சைகோன் எனது தாய்மாமா. நாங்கள் அனைவரும் சொத்துகளை கூட்டாக அனுபவித்துவருகிறோம். தாவா சொத்தைபொறுத்து 1,2 பிரதிவாதிகள் கிரையம் கொடுக்கவில்லை. தாவா சொத்துகளில் 1,2 பிரதிவாதிகளுக்கு பாதி பங்கு உள்ளது.

<u>6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

எனது சொந்த ஊர் உடைக்குளம். தாவா சொத்து உடைக்குளம் கிராமத்தில் உள்ளது. எனது பெயர் விஜயகுமார். நான் அழகர் உடைய வாரிசு. நான் அழகரின் வாரிசு என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை. வாரிசு தாக்கல் செய்ததால் தான் நான் அழகர் வாரிசு என்று சட்டப்படி நிருபனம் ஆகும். வழக்கிற்கு விபரம் சொன்னது நான் தான். எனது தாயார், சகோதரிக்கோ வழக்கு விபரம் நேரடியாக தெரியாது. 1,2 பிரதிவாதிகள் அழகரின் தாய்மாமா பிள்ளைகள். அவர்கள் மானாமதுரையில் இருக்கிறார்கள். தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் 1 ½ கீ.மீ தூரம் இருக்கும். 1வது இலக்க சொத்தின் சர்வே நம்பர்.390. அதனுடைய விஸ்தீரணம் 7 ஏக்கர் 98 செண்ட். 1வது இலக்க சொத்தின் நெல்லிமரம், மாமரம் உள்ளது. 6ம் பிரதிவாதி விவசாயம் செய்துவருகிறார் என்று சொன்னால் இல்லை. நான் தான் விவசாயம் செய்துவருகிறேன். 700 நெல்லிமரம், 50 மாமரம் உள்ளது. நான் தான் விவசாயம் செய்துவருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவா 1வது இலக்க சொத்துக்கு இன்றைய தேதியில் 6ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது. அவரது பெயருக்கு பட்டா ஏற்பட்டு 15 வருடங்கள் இருக்கும். அவர் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு 2020ல் தெரியும். 6ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டதை ரத்து செய்ய

நானோ எனது தாயார் சகோதரிகளோ அதை ரத்து செய்ய அது ஏற்பட்டு 15 வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா சொத்தை சுற்றி முள்வேலி இருந்தது. நான் 2019ம்ஆண்டு வெளிநாட்டில் இருந்து இந்தியாவிற்கு வந்தேன். எனது அம்மா, சகோதரிகள் தாவா சொத்துகள் உள்ள ஊரில்தான் இருந்து வருகிறார்கள். நெல்லி, மாமரங்கள் நட்டு சுமார் 25 வருடங்கள் இருக்கும். அதை இன்றைய தேதிவரை 6ம்பிரதிவாதி ஏஜெண்ட் முத்துராஜா பராமரித்து வருகிறார். எனது தாயரோ, சகோதரிகளோ 6ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் எங்களுக்கு 2020ம் ஆண்டு தான் தெரியவந்தது. நான் வெளிநாட்டில் இருந்த சமயத்தில் எனது தாயாரும், சகோதரிகளும் நெல்லி மரங்களை பராமரித்து செய்து செலவு செய்துவந்தார்கள் என்று காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் இல்லாததை பயன்படுத்தி தாவா 1வது இலக்க சொத்தை 15 வருடங்களுக்கு முன்பே 6ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துகொண்டார். இன்றுவரை நாங்கள் தாவா சொத்துக்கு நுழைய முடியவில்லை. எனக்கு ஜெயகண்ணனை தெரியும் என்றால் தெரியாது. 3ம்பிரதிவாதி, 6ம் பிரதிவாதி மற்றும் கணவர் மீது சிவகங்கை முன்சிப் கோர்டில் வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு 6ம்பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்று பற்றி சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா 1வது இலக்க சொத்தின் சுவாதீனத்தை 6ம்பிரதிவாதி எங்களிடம் ஒப்படைக்க வேண்டி பரிகாரம்கேட்கவில்ல என்று சொன்னால் கேட்டுகொண்டு தான் இருக்கிறோம். வழக்கு 1வது இலக்க சொத்து எனக்கும், எனது சகோதரிகளுக்கும் தனித்து பாத்தியமானது என கோரி விளம்புகை பரிகாரம் தாக்கல் செய்யவில்லை. நான் மலேசியாவில் வேலை பார்த்து வந்தேன். நான் கடைசியாக 2019ல் இந்தியா திரும்பினேன். நான் 2019 8வது மாதம் தாவா சொத்து உள்ள கிராமத்திற்கு வந்தேன். எந்த மாதம், எந்த தேதியில் தாவா சொத்தை சென்று பார்த்தேன் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் இல்லாததால் அதற்குரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 முதல் 11 வரை

ஆவணங்களை அக்டோபர் 2வது வாரத்தில் 2020ல் நகல் போட்டு வாங்கி உள்ளேன். வா.சா.ஆ.3 23.10.2020ல் நகல் வாங்கி உள்ளேன். வா.சா.ஆ.12ன்படி நான் மட்டும் சிவகங்கை எஸ்.பி இடம் 21.10.2020ல் புகார் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.14, 2020 அக்டோபர் 2வது வாரத்தில் நகல் போட்டு வாங்கி உள்ளேன். இன்றைய தேதியில் தாவா 1வது இலக்க சொத்துக்கு கிராம கணக்கு யார் பெயரில் உள்ளது என காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1,2 பிரதிவாதிகள் எனது தகப்பனாரின் தாய்மாமா மகன்கள் என்று காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. வாரிசு பட்டியல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லாததால் வழக்கு தாக்கல் செய்ய அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்து எந்த காலத்திலும் எங்களுடைய சொத்து இல்லை என்பததானால் தான் நான் வெளிநாட்டில் இருந்து வந்தபிறகு 2019ம் ஆகஸ்ட் மாதம் வந்தபிறகு ஒரு மாதம் கழித்தபிறகு வழக்கு சம்பந்தமான ஆவணங்களை பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்த சமயத்திலும் தாவா சொத்து எங்களுக்கு பாத்தயிமில்லை என்பதனால் தான் எனது தாயாரோ, சகோதர, சகோதரிகளோ, 1ம் பிரதவாதி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் பட்டாவை ரத்து செய்ய கோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா பரிகாரம் கிடைக்ககூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

7 முதல் 10 பிரதிவாதிகள் தாவா சொத்தில் 4 ஏக்கர் கிரையம் வாங்கும்போது 6ம் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்தது. இன்றைய தேதியில் 7 முதல் 10 பிரதிவாதிகள் மேற்படி சொத்தை அனுபவம் செய்துவருகிறார்கள்.